தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 28-1-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## நீர்போக நடவு உருளைக்கிழங்கிற்கு அறுவடையின் போது நிலையான விலை கிடைக்கும்

உலகளவில் உற்பத்தி அடிப்படையில், உருளைக்கிழங்கு சோளம், நெல், கோதுமைக்க பிறகு நான்காவது மிக முக்கிய உணவு பயிராகும். 2013ல் உலக அளவில் 19.5 மில்லியன் எக்டரிலிருந்து, 368 மில்லியன் டன்கள் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டது. இந்தியாவில் 2013-14ல் உருளைக்கிழங்கு 2.02 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 46.39 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. உத்திரபிரதேசம் (32%), மேற்கு வங்காளம் (26%) மற்றும் பீகார் (14%) ஆகிய மாநிலங்கள் இந்தியாவின் மொத்த உருளைக்கிழங்கு உற்பத்தயில் 70 சதவீத பங்களிக்கின்றன.

தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் கணக்கீட்டின்படி, 2013-14ல் தமிழ்நாட்டில் உருளைக்கிழங்கு 5353 எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 1.16 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2013-14ல் தமிழ்நாட்டின் உருளைக்கிழங்கு பரப்பளவு 35 சதவீதமும் கடந்த ஆண்டை காட்டிலும் உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டின் மலைப்பாங்கான பகுதிகளான திண்டுக்கல் (38%), நீலகிரி (36%), கிருஷ்ணகிரி (20%) மற்றும் ஈரோடு (6%) மாவட்டங்களில் உருளைக்கிழங்கு பெருமளவு பயிரிடப்படுகிறது.

நீர்போகம்/ இறவை சாகுபடி உருளைக்கிழங்கு பிப்ரவரி –மார்ச் மாதங்களில் பயிரிடப்பட்டு, மே -ஜுன் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. உருளைக்கிழங்குகள் ஐந்து முதல் ஆறு மாதங்கள் வரை குளிர்பதன சேமிப்பு முறையில் சேமிக்கப்படுகிறது. மேட்டுபாளையத்தில், குளிர்பதன சேமிப்பு கிடங்குகள் உள்ளன. பெரும்பாலும், கர்நாடகா மற்றும் உத்திரப்பிரதேசம் போன்ற பிற மாநிலங்களிலிருந்து வரும் உருளைக்கிழங்குகள் விதை உபயோகத்திற்க்காக மட்டுமே இங்கு சேமிக்கப்படுகின்றன. ஜனவரி முதல் மே மாதம் வரை விதைக்காக அதிகளவு

உருளைக்கிழங்குகள் சேமிக்கப்படுகின்றன. விவசாயிகள் நீர்போக விதைப்பு முடிவுகளை எடுப்பதற்கு, அதன் அறுவடையின்போது கிழங்கிற்குக் கிடைக்கும் விலை குறித்து அறிய ஆவலாக உள்ளனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் அலுவலகம் மேட்டுபாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் (NCMS) கடந்த 23 வருடங்களான (1991 -2014) நிலவிய உருளைக்கிழங்கின் விலை குறித்து ஆய்வு மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின்படி, விவசாயிகளுக்கு நல்ல தரமான உருளைக்கிழங்கிற்கு மே - ஜுன் மாதங்களில், கிலோவிற்கு ரூ.25 முதல் ரூ.27 வரை விலை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் விலையினை அடிப்படையாக கொண்டு விவசாயிகள் தங்கள் நீர்போக உருளைக்கிழங்கு சாகுபடியை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u> :-

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-

பேராசிரியர் மற்றும் தலைவர்,
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்,
விஜயநகரம்,
உதகமண்டலம் - 643 001.
தொலைபேசி: 0423-2442170

மக்கள் தொடர்பு அலுவலர்